# காவியமும் காப்பியமும்

எஸ். வி. சிவலிங்கம்

"காவ்யா" என்ற வடசொல்லின் திரிபே காவியம் (ஜகந்நாதன், 1955:12). இது "கவி" என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது. கவிஞர்களிட மிருந்து தோன்றியது என்பது இதன் பொருள். இதுவே "காப்பியம்" என்று தமிழில் திரிந்து வரலாயிற்று. அடியார்க்கு நல்லாரும் "காப்பியம்" என்பது வடமொழிப் பெயர் என்றனர். தொன்று தொட்டு வரும் இச்சொல் வரலாற்றி னைப் புறக்கணித்து ஒதுக்கி, "காப்பு + இயம்" எனப் பிரித்து ஏதோ தமக்குத் தோன்றியதோர் பொருள் கண்டு அது தமிழ்ச் சொல்லேயாமெனச் சிலர் சாதிக்க முயன்றனர் (ஜகந்நாதன், 1955:12; வையாபுரிப்பிள்ளை, 1962:15-16). இரா. வ. கமலகண்ணரும் தம்முடைய "உலகப் பெருங்கவிஞர் கம்பர்" என்ற நூலில் இக்கருத்தை ஆமோதிக்கின்றார் (1984:18).

மறுகோணத்தில், காப்பியத்தின் மூலம் "காப்பியன், பொருள் காப்போன் என்பதாகும்" என்று சேனாவரையர் கருத்துரைக்கின்றார் (தொல்காப்பியம், 1975:5). இரா. காசிராசன் தமது "காப்பியம் ஓர் சொல்லாய்வு" என்ற ஆய்வுக் கட்டுரையில் "காப்பியம் என்பது பழமரபுகளைக் காத்து இயம்புவது (1973:102) என்கிறார். "ஒரு மொழியைச் சிதையாது காப்பது காப்பியம். இலக்கணத்தின் இயல்பு மரபு வழாமல் காத்தல்..... காப்பு நூல் என்று அதற்குப் பெயரிட்ட னர். காப்பு இயன்றது காப்பியம் என்றனர்.... மொழியின் காப்பு இயன்றது காப்பியம் பொருந்தும்; இந்நிலையில் மொழியியல்பைக் காக்கும் இலக்கண நூலுக்கும், வாழ்வியல்பைக் காக்கும் (காப்பமை மந்திரம் -பெரு. 4-711) மந்திர நூலுக்கும் இது பெயராகிப் பின் கதைப் பொருளுடைய காவியத்திற்கும் ஆயிற்று எனலாம்" (சுப்பிரமணியன், 1979:4-5).

இவரை விட ஒரு படி மேலே போய் விடுகிறார் "தமிழில் காப்பியங்கள்" என்ற நூலாசிரியர் எஸ். சௌந்தரபாண்டியன்;

"காப்பியம்" தூய தமிழ்ச் சொல்லே!

கவி எழுதுவது காவியம்; காப்பியன் எழுதுவது காப்பியம்.

காப்பியம், காவியம் - இரண்டுமே தமிழ்ச் சொற்கள்தாம்.

காவியத்தை வடநூலார் "காவ்யம்" என்று குறிக்கவே நாம் மிரண்டு விட்டோம்!

காப்பியன் எவ்வாறு புலவனைக் குறிக்கும்?

காப்புச் செய்பவன் காப்பியன்.

கதையையும், சொல்லழகையும், உணர்வுகளையும் நூல் வடிவில் படைத்து சுவடியில் எழுதிக் காத்தலால் அவனுக்குப் பெயர் காப்பியன் என வந்தது.

எதனையும் கவி வடிவில் எழுதியவன் கவிராயன் என்று பிற்காலத்தில் கூறப்பட்டதையும் காணலாம்.... காப்பியனார் என்பது கவிராயரையே குறிக்கும் என வாதிடுகிறார் (1988 : 1-2)

மேலே சுட்டிய கருத்து வாதங்களில் ஒரு சாரார் வடமொழிச் சார்பாக வும் மற்றொரு சாரார் தமிழ்மொழிச் சார்பாகவும் தங்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். இவ்விரு சாராரின் கருத்துக்களும் அப்படியே ஏற்றுக்

கொள்ள இயலாதனவாய் உள்ளன. காவியம் -காப்பியம் என்ற இவ்விரு சொல்லாட்சியும் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் காலந்தோறும் பயின்று வந்துள்ளமை புலப்படுகின்றது.

"தொன்று தொட்டு வரும் "காவியம்" என்னும் சொல்லின் வரலாற்றி னைப் புறக்கணித்து ஒதுக்கி "காப்பு + இயம்" எனப் பிரித்து ஏதோ தமக்குத் தோன்றியதோர் பொருள் கண்டு அது தமிழ்ச் சொல்லேயாமெனச் சிலர் சாதிக்க முயல்கின்றனர்" என்று இச்சொல் தொன்றுதொட்டு வந்துள்ளதாக பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுவது அவ்வளவு ஏற்புடையதா கத் தோன்றவில்லை. காரணம், "காவியம்" என்ற இச்சொல் தமிழுலகில், "காவியவியற்கை விரிக்குங்காலை" (1958 : 309) என்று திவாகர முனிவர் இயற்றிய "சேந்தன் திவாகரம்" என்ற நூலிலேயே முதன் முதலில் பயின்று வந்துள்ளது. இந்நூலின் காலம் கி.பி. 6ஆம் நூற்றாண்டு என்றும் 7ஆம் நூற்றாண்டு என்றும் 8ஆம் நூற்றாண்டு என்றும் மாறுபட்ட கருத்துக்கள் உலாவுகின்றன. எது எப்படி ஆயினும், கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே "காவியம்" என்ற இச்சொல்லாட்சி தமிழுலகுக்கு வந்துள்ளது.

மாறாக, காப்பியம் என்ற சொல்லாட்சி கி.பி. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிலப்பதிகாரத்தில், "காப்பியத் தொல்குடி கவின் பெற வளர்ந்து" என்றும் பயின்று வந்திருப்பதிலிருந்தும் அறிய வருகின்றது. ஆக, "காவியம்" என்ற சொல்லாட்சியை விட "காப்பியம்" என்ற சொல்லாட்சி காலத்தால் முந்தியது என்று வரையறுக்கலாம். இம்முடிவின்படி "காவ்யா" -"காவியா" என்ற வட சொல்லின் திரிபே "காப்பியம்" என்ற தமிழ்ச் சொல் என்ற கருத்து பிழைப்பட்டுப் போகின்றது.

அதே வேளை "காவியம்" என்பது தூயத் தமிழ்ச் சொல்லே என்பதும் அவ்வளவு ஏற்புடைய காரணமாகப் படவில்லை. இதற்குப் பொருள் கூறிக் காரணம் கற்பிப்பதும் வலிந்து சொல்லப்படுவதாகவே தெரிகின்றது. மொழிக்கு மொழி சொற்கள் கொண்டு கொடுத்தலில் இச்சொல் "காவ்யா" என்ற வடசொல்லின் திரிபாகவே "காவியம்" என்று தமிழில் வழங்கி இருக்கலாம்.

இந்தக் "காவியம்" என்ற சொல் எப்படிக் "காப்பியம்" என்ற சொல் லைத் தன்னுள் அடக்கிக் கொண்டது என்று ஆயும் பொழுதில், இலக்கண நூல்களே பதில் பகர்கின்றன எனலாம்.

தமிழின் முதல் காப்பியமான சிலப்பதிகாரமும், அதனோடு கதைத் தொடர்புடைய மணிமேகலையும் கி.பி. 2 அல்லது 3ஆம் நூற்றாண்டுகளில் தோன்றி விட்டாலும் காப்பிய இலக்கணங்கள் தமிழில் 11ஆம் நூற்றாண்டள விலேயே அரும்பத் தொடங்கின. இந்நூற்றாண்டில் எழுந்த வீரசோழியமே முதன்முதலில் காப்பிய இலக்கணங்களை விளக்க முயல்கிறது. எனினும், "இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்" (பவனந்தி, சூ. 141) என்ற உண்மைக்கேற்ப அதற்கு முன் எழுந்த தமிழ்க் காப்பியங்களை அடிப்படையா கக் கொண்டு அது காப்பிய இயல்புகளை வரையறுக்க முயலவில்லை. மாறாக, வடமொழியில் தண்டியாசிரியரால் இயற்றப்பெற்ற காவியாதரிசத் தையே அது தமிழில் மொழி பெயர்க்க முயன்றது. அதன் அலங்காரப் படலம் இவ்வாறு அமைந்ததே! எனவே, இந்நூல் அதிக செல்வாக்குப் பெறவில்லை. இதற்குப் பின்னர் 12ஆம் நூற்றாண்டில் எழுந்த "தண்டியலங்காரமே" காப்பிய இலக்கணங்களை விரிவாகக் கூறும் முதல் நூலாகக் கருதப்படுகின்றது. இதுவும் காவியாதரிசத்தின் வழிநூலே! தமிழில் பின்னர் எழுந்த காப்பிய

இலக்கணங்கள் யாவும் இதனை அடிப்படையாகக் கொண்டே எழுந்தன (தண்டாயுதம், 1975 : 196).

தொல்காப்பியத்தில் பொருளதிகாரத்தின் கீழ் உவமையியலும் செய்யுளியலும் தனித்தனிக் கூறுபாடுகளாக -அத்தியாயங்களாகப் பயின்று வந்துள்ளனவேயன்றித் தமிழில் அணியிலக்கணம் தனியாகப் பழங்காலத்தில் இருக்கவில்லை. வடமொழித் தொடர்பினால் இவ்விலக்கணம் தமிழிலும் தனியே உளதாயிற்று என்பதில் ஐயம் இல்லை.

"தமிழ்தான் நான்கு வகைப்படும். எழுத்தும்,
சொல்லும், பொருளும், யாப்புமென"
(இறையனார் - அகப்பொருள் உரை, சூ. 1)

என்னும் பகுதியில் அக்காலத்தில் தமிழ் இலக்கணத்தின் பிரிவு யாப்பினோடு நின்றிருந்ததெனத் தெரிகிறது. ஆதலின், அக்காலத்தின் பின்னரே அணியிலக்கணம் தமிழில் தனியே அமைக்கப்பட்டதென்று கூறலாம்.

ஆக, வடமொழிக் காவியங்களின் இலக்கணங்களை எடுத்தோதிய காவியதரிசத்தைத் தமிழாக்கிய போதில் அது காவிய இலக்கணங்களைக் கூறுவதைக் கொண்டு தமிழில் "பொருள் தொடர் நிலைச் செய்யுள்" என்ற பெயரில் விளங்கி வந்த காப்பியத்தையும் உரையாசிரியர்களும், திறனாய்வாளர்களும் அதே இலக்கண அச்சில் ஒப்பேற்றிப் பார்த்து ஒத்துப் போயினர். தமிழ்க் காப்பியங்களும் சிலப்பதிகாரம், மணிமேகலைக்குப் பின்னர் பெரிதும் வடமொழித் தாக்கங்களைக் கொண்டு விளங்கினமையால் மேற்குறிப்பிட்ட இலக்கணக் கூறுபாடுகளும் ஒத்துப் போயின ஆக, "காவிய இலக்கணம்" என்ற சொல்லாட்சியே காலப்போக்கில் "காப்பியம்" என்ற சொல்லைத் தன்னுள் அடக்கிக் கொண்டு இந்நாளில் "காவியத்தின் திரிபுதான் காப்பியம்" என்று மயங்கி விழிக்கச் செய்து விட்டது.

அந்நாளில் தமிழுலகில் தனித்தனி மலர்கள் பூப்பது போன்று தனித்தனிக் கவிதைகளாகப் புலவர்கள் பாடினர். காலப்போக்கில் வடமொழி இலக்கியத் தாக்கத்தால் -இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியத் தாக்கத்தால் தனித்தனி மலர்களை மாலை கட்டி புது வடிவம் கொடுத்து அழகு பார்ப்பது போல் பொருளால் தொடர்பு படுத்திச் செய்யுள்களைக் கோவைப்படுத்திப் பாமாலை கட்டும் முயற்சியில் (பெருள் தொடர்நிலைச் செய்யுள்) இறங்கினர். இது தனித்தனிக் கவிதைகளைப் பாடுவது போலல்லாது, மிகமிக கவனமுடன் பாடவேண்டிய பெருமுயற்சியாகவே இருந்தது. இது போன்ற பெருமுயற்சியில் இறங்கிய புலவர் தங்களுக்குத் தெய்வத்தின் துணையும், அருளும் வேண்டி முதலில் தெய்வத்தின் பெயரில் காப்புச் செய்யுள் பாடி, பின்னர் தாங்கள் இயம்ப விரும்பிய கருத்துக்களைப் "பொருள் தொடர் நிலைச் செய்யுள்" வடிவில் இயம்பத் தொடங்கினர். இப்படி இறைவனை வேண்டிக் காப்புச் செய்யுள் பாடி இயம்பியதால் காலப்போக்கில் இது போன்ற படைப்புக்கள் "காப்பியம்" என்று பெயர் பெற்றிருக்கலாம் என்றும் சிந்திக்கத் தூண்டுகின்றது.

"காப்பியம்" என்பது ஆங்கிலத்தில் "EPIC" என்று சொல்லப்படுவதற்கு நிகரானது. வடமொழியில் இது மகாகாவ்யம் என்றும், இதிகாசம் என்றும்

அழைக்கப்படுவது. வடமொழியில் "காவ்யம்" என்றால் பொதவாகக் கவிதை என்றும் பொருள்படும் (சீனிச்சாமி, 1985 : 9).

ஆங்கிலச் சொல்லான "EPIC" என்பது "EPOS" என்ற கிரேக்கச் சொல்லில் அடியாகத் தோன்றியது. "EPOS" என்றால் "வீரமரபுச் செயல்களைச் சிறப்பிக்கும் ஆதிகாலத்து - எழுத்து வடிவத்தில் இல்லாத - வாய்மொழியாகக் கூறப்பட்ட கதை, உரை, கவிதை" என்று பொருளாகும். வீரகாவியம், காப்பியம், பெருங்காப்பியம், தொடர்நிலைச் செய்யுள் என்று தமிழில் காப்பியம் அழைக்கப்படுவதுண்டு (சீனிச்சாமி, 1985 : 9).

பழந்தமிழில், காப்பியம் என்ற சொல் தோன்றியபோது "EPIC" என்ற பொருளில் ஆளப்படவில்லை: பொதுவான கவிதை நூலையே குறித்தது எனக் கருதல் தகும் என்கிறார் எஸ். சௌந்தரபாண்டியன் (1989:3).

இராமாயணம், பாரதம் (இவை சிலப்பதிகாரத்திற்கு முன்பு தமிழில் தோன்றி மறைந்தவை எனக் கருத இடமுண்டு), சிலப்பதிகாரம் முதலியன எழுந்த பின்தான், காப்பியம் என்ற சொல்லுக்கு மதிப்பு மிக்கதோர் இலக்கிய வகை என்ற பொருண்மை எழுந்தது (சௌந்தரபாண்டியன், 1988 : 3)

காப்பியம் என்ற சொல் இன்றைய நிலையில் நால்வகை உறுதிப் பொருளையும் கூறுவதாய்க் கதை பற்றி வரும் தொடர் நிலைச் செய்யுள் எனப் பொருள்படுகின்றது (சுப்பிரமணியன், 1979 : 1).

## துணை நூல்கள்


1. இறையனார் அகப்பொருள் உரை.

2. கமலக்கண்ணன், இரா. வ., 1984. **உலகப் பெருங்கவிஞர் கம்பர்.** சிதம்பரம் : மணிவாசகர் பதிப்பகம்.

3. காசிராசன், இரா., 1973. **"காப்பியம் ஓர் சொல்லாய்வு",** இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற ஐந்தாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை. திருவனந்தபுரம் : கேரளப் பல்கலைக்கழகம்.

4. சிலப்பதிகாரம். 1959. சென்னை : இளைஞர் தமிழ்ச் சங்க வெளியீடு.

5. சீனிச்சாமி, து., 1985. தமிழில் காப்பியக் கொள்கை (முதற்பகுதி). தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கலைக்கழகம்.

6. சுப்பிரமணியன், ச. வே., 1979. காப்பியப் புனைதிறன். சென்னை : தமிழ்ப் பதிப்பகம்.

7. சௌந்தரபாண்டியன், எஸ்., 1988. **தமிழில் காப்பியங்கள்.** சென்னை : ஸ்டார் பிரசுரம்.

8. தண்டாயுதம், இரா., 1975. **ஓர் இலக்கிய ஆய்வு**. சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்.

9. திவாகர முனிவர், 1958. **சேந்தன் திவாகரம்.** சென்னை : கழக வெளியீடு.

10. **தொல்காப்பியம்,** சிறப்புபாயிரம், இளம்பூரணர் உரை. 1974. சென்னை: கழக வெளியீடு.

11. **நன்னூல்.**

12. **மணிமேகலை,** 1964. சென்னை : இளைஞர் தமிழ்ச் சங்க வெளியீடு

13. வையாபுரிப் பிள்ளை, எஸ்., 1962. **தமிழ் இலக்கிய சரிதத்தில் காவியகாலம்.** சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்,

14. ஜகந்நாதன், கி. வா., 1955. **தமிழ்க் காப்பியங்கள்** (ஆராய்ச்சி). சென்னை : அமுத நிலையம் லிமிடெட்.